செ.வெ.எண்: 31 / மார்ச் நாள்: 17.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## 2016 சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படும்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் இன்று (17.03.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நடைபெறவிருக்கும் 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் முன்னேற்பாடு பணிகளும், பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 1800 425 7038 குறித்து பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பர ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதன்பின்பு, இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகை தந்துள்ள பொதுமக்களிடம் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டம் குயவன்குடி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பெற்றோர்களிடமிருந்து கையொப்பம் பெறுவதற்கான வாக்காளர் உறுதிமொழி படிவத்தினை வழங்கினார். மாணவ, மாணவியர்கள் மூலம் அவர்களது பெற்றோர்களிடத்தில் வாக்காளர் உறுதிமொழி படிவத்தில் கையொப்பம் பெறுவதனால் தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டும் என்ற எண்ணம் பெற்றோர்களுக்கு இயற்கையாகவே ஏற்படும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.கிருஷ்ணமூர்த்தி உள்பட அரசு அலுவலர்கள்,ஆசிரியர், ஆசிரியைகள்,மாணவர்கள், பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**